செய்தி வெளியீடு எண் : 1232 நாள் : 18.08.2024

**இந்தியாவின் தலை சிறந்த தலைவர்களில் ஒருவரான முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவையொட்டி மாண்புமிகு மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி அவர்களின் வாழ்த்துச் செய்தி**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா இன்று **(18.8.2024)** நடைபெறவுள்ளதையொட்டி மாண்புமிகு மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு.ராகுல்காந்தி அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில், தமிழ்நாட்டு மக்களுக்கு தனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும், அவரது வியத்தகு வாழ்க்கை மற்றும் பாரம்பரியத்தைப் போற்றும் வகையில் நினைவு நாணயம் வெளியிடப்படுவதை அறிந்து மகிழ்ச்சி அடைவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சமூகரீதியான முற்போக்குப் பார்வையும், மக்களுக்கு அதிகாரம் அளிப்பதில் அசைக்கமுடியாத அர்ப்பணிப்பும் கோடிக்கணக்கான மக்கள் கண்ணியமான வாழ்க்கையை வாழ வழி வகுத்தது என்றும். அவரது உறுதியான தலைமையின் கீழ், தமிழ்நாடு ஒரு திடமான இலட்சியப் பாதையில் சென்றுள்ளது என்றும், அவரது கருத்தியல் தெளிவும் மாற்றத்திற்கான அர்ப்பணிப்பும் தமிழ்நாடு பல்வேறு துறைகளில் தன்னை முன்னோடி மாநிலமாக நிலைநிறுத்திக் கொள்ள உதவியதாகவும், பல மாநிலங்கள் பெரிய கனவுகள் காண ஊக்கமளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களையும் பாராட்ட விரும்புவதாகவும், அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய இந்தியாவைப் பாதுகாப்பதில் அவரது அசைக்க முடியாத உறுதிப்பாட்டை பாராட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

•••••••••

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழாவையொட்டி மாண்புமிகு மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு.ராகுல்காந்தி அவர்களின் வாழ்த்துச் செய்திக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாணய வெளியீட்டு விழாவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, வாழ்த்துகளைத் தெரிவித்த சகோதரர் திரு. திரு. ராகுல் காந்தி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி!

தலைவர் கலைஞரின் கனவுகளை நிறைவேற்றத் தொடர்ந்து ஒன்றிணைந்து பாடுபடுவோம்!

.........

Sincere thanks, dear brother Thiru.RahulGandhi, for your warm wishes on the significance of Muthamizh Arignar Kalaignar Commemorative Coin release ceremony. Let us continue to work together to fulfill his dreams!

.........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu